சுருக்கம்

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை – தொழிற் பள்ளிகள் –தொழிற் பள்ளிகளுக்கான அங்கீகாரம் புதுப்பிக்க / புதிய தொழிற் பள்ளிகள் / கூடுதல் தொழிற் பிரிவுகள் / கூடுதல் அலகுகளுக்கு அங்கீகாரம் வழங்க கட்டணத்தொகை மற்றும் கால அளவு நிர்ணயம் செய்யப்பட்டது – அரசாணைக்கு திருத்தம் – வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (எஸ்–2) துறை

அரசாணை (நிலை) எண்.67 நாள் 07.08.2024

குரோதி வருடம், ஆடி–22,
திருவள்ளுவர் ஆண்டு 2055

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.91, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (எஸ்2) துறை, நாள்: 11.07.2022.
2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரின் கடிதம் ந.க.எண்.34386/தொ.ப–1/2023, நாள் 05.07.2024.

-----

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பத்தி எண். 6–க்குப் பின்னர் கீழ்க்காணும் பத்திகள் சேர்க்கப்பட்டு ஆணையிடப்படுகிறது:–

6 (அ). "தொழிற் பள்ளிகள் அங்கீகாரம் / நீட்டிப்பு / கூடுதல் அலகுகள்/ கூடுதல் தொழிற் பிரிவுகளுக்கு அங்கீகார ஆணை வேண்டி விண்ணப்பித்த விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து, அங்கீகாரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும் சமயத்தில், தீ தடையின்மை சான்று, சுகாதார சான்று, பொது கட்டிட உரிமம் மற்றும் கட்டிட உறுதித்தன்மைச்சான்று போன்ற சான்றுகள் மற்றும் கூட்டுவைப்புத் தொகை, குத்தகை / வாடகை உடன்படிக்கை ஆகியன புதிதாக / புதுப்பித்து சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக தொழிற் பள்ளியின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் அவர்கள் மேல்முறையீடு செய்ய ஒவ்வொரு ஆண்டும் வாய்ப்பு வழங்கி, ஆகஸ்ட் 31–ஆம் தேதிக்குள் அவர்களது கோரிக்கையை பரிசீலத்து இறுதி ஆணை வழங்க வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் இயக்குநர் / ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. "

6 (ஆ). "ஏற்கனவே அங்கீகாரம் பெற்று செயல்பட்டு வரும் தொழிற் பள்ளிகள் அங்கீகாரத்திற்கு தேவையான ஆவணங்களான தீ தடையின்மை சான்று, சுகாதார சான்று, பொது கட்டிட உரிமம் மற்றும் கட்டிட உறுதித்தன்மைச்சான்று, போன்ற சான்றுகள் மற்றும் கூட்டுவைப்புத்தொகை, குத்தகை / வாடகை உடன்படிக்கை ஆகியவற்றை உரிய காலத்திற்குள் காலாவதியாகும் முன்பே அவற்றை புதுப்பித்து சம்மந்தப்பட்ட மண்டல பயிற்சி இணை இயக்குநர்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும், அதனை மண்டல பயிற்சி இணை இயக்குநர்கள் முறையாக கண்காணிக்க வேண்டும் எனவும், அவ்வாறு உரிய காலத்தில் புதுப்பித்து சமர்ப்பிக்காத அல்லது தொழிற் பள்ளிகளுக்கான விளக்க குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு எதிரான செயல்களில் ஈடுபடும் தொழிற் பள்ளிகளின் அங்கீகாரத்தை இரத்து செய்திட உரிய தொழிற் பள்ளிக்கு காரணம் கோரும் அறிவிக்கை (Show cause notice) அனுப்பப்பட்டு, if industrial school not rectified, தொழிற் பள்ளியின் அங்கீகாரத்தினை இரத்து செய்ய வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் / ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது."

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**கொ. வீர ராகவ ராவ்**
**அரசு செயலாளர்**

பெறுநர்:
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர்,
சென்னை – 600 032.

<u>நகல்</u>:

கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை முதன்மை
தனிச் செயலர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை– 600 009.

இணைச் செயலரின் நேர்முக உதவியாளர்,
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை–600 009.

இருப்புக் கோப்பு/சுத்த நகல் (கோ.எண்.efile 4089/எஸ்.2/2024).

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜோ. பார்த்தசாரதி 8/8/2024
பிரிவு அலுவலர்
8.8.24